**செய்தி வெளியீடு எண்: 554** **நாள்: 16.08.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**முக்கிய அணைகளின் நீர்வரத்து மற்றும் நீர் வெளியேற்றம் அதிகரித்ததையொட்டி தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது**

இன்றைய நிலவரப்படி, கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து வினாடிக்கு 2 லட்சம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுவதாலும், பவானிசாகர் அணையிலிருந்து வினாடிக்கு 50 ஆயிரம் கனஅடி மற்றும் அமராவதி அணையிலிருந்து வினாடிக்கு 33 ஆயிரம் கனஅடி நீர் வெளியேறுவதாலும், காவேரி கரையோரம் உள்ள தாழ்வான பகுதிகளை பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க தமிழ்நாடு அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. சம்பந்தப்பட்ட மாவட்ட நிருவாகம் இதுவரை மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, இன்று (16.8.2018) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள்.

இக்கூட்டத்தில்,

- தென்மேற்கு பருவமழை 2018–ல் கூடுதலாக மழை பொழிந்த மாவட்டங்கள் மற்றும் குறைவாக மழை பொழிந்த மாவட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.
- காவேரி வடிநில பகுதிகளில் அமைந்துள்ள அணைகளில், குறிப்பாக மேட்டூர் அணை, பவானிசாகர் அணை மற்றும் அமராவதி அணை ஆகியவற்றின் நீர்மட்டம், கொள்ளளவு, நீர்வரத்து மற்றும் நீர் வெளியேற்றம் ஆகியவற்றின் தற்போதைய நிலவரம் குறித்து விவாதிக்கப்பட்டது.
- மேட்டூர் அணைக்கு நீர்வரத்தும், வெளியேற்றமும் தற்போது வினாடிக்கு 1,65,000 கனஅடியாக உள்ளது.
- மேலும் வைகை வடிநிலப் பகுதி, தாமிரபரணி வடிநிலப் பகுதி மற்றம் கோதையாறு வடிநிலப் பகுதிகளில் அமைந்துள்ள அணைகளின் நீர்வரத்து மற்றும் நீர் வெளியேற்றம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

- ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, சம்பந்தப்பட்ட மாவட்ட நிருவாகம் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான சுற்றறிக்கை அனுப்பப்பட்டதெனவும், தரைமட்டப் பாலங்களில் எச்சரிக்கை பதாகைகள் அமைக்கப்பட்டதெனவும், ஆற்றங்கரையோரத்தில் வசிக்கும் மக்களுக்கு, குளிக்கவோ, துணி துவைக்கவோ, மீன் பிடிக்கவோ, நீச்சலடிக்கவோ, செல்பி எடுக்கவோ, ஆற்றைக் கடக்கவோ மற்றும் பிற பொழுதுபோக்கு நிகழ்வுகளில் ஈடுபடவோ கூடாது என தண்டோரா, ஆட்டோவில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கிகள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக எச்சரிக்கை விடப்பட்டது.

- பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளை நீர்நிலைகளுக்கு செல்லவிடாமல் அறிவுறுத்த வேண்டியும், விவசாயிகள் தங்களின் கால்நடைகளை பாதுகாப்பாக வைக்க வேண்டியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

- பல்துறை அடங்கிய மண்டல குழுக்கள் மூலம், அவ்வப்போது நிலவரத்தை தொடர்ந்து கண்காணித்து, பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பாக வெளியேற்றி, நிவாரண முகாம்களில் தங்க வைத்து அவர்களுக்கு உணவு, சுத்தமான குடிநீர், ஆண், பெண்களுக்கு தனித்தனியே கழிப்பிட வசதி, போர்வைகள், ஜெனரேட்டர், அதற்கு தேவையான எரிபொருள், மின்வசதி, மருத்துவ மற்றும் இதர சுகாதார வசதிகள் வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. இப்பணிகளை சரியான முறையில் செயல்படுத்திட மையம்தோறும் ஒரு ஒருங்கிணைப்பாளரை நியமிக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

- இதுவரை நாமக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் இருந்து **2,538** மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு **35** நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, நியமிக்கப்பட்ட மூத்த இந்திய ஆட்சிப் பணி அந்தஸ்தில் உள்ள கண்காணிப்பு அலுவலர்கள் மாவட்ட நிருவாகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை கண்காணித்து வருகின்றனர்.

- ❖ இதுவரை கன்னியாகுமரி, ஈரோடு, தேனி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 14 சாலைகள், 4 பாலங்கள் மற்றும் 2 கால்வாய்கள் சேதமடைந்துள்ளன. சேதமடைந்தவற்றை சீரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

- ❖ மக்களை பாதுகாக்கும் பொருட்டு தமிழ்நாடு பேரிடர் மீட்புப்படையிலிருந்து 492 நபர்கள் காவேரி ஆற்றுப் படுகைகளில் உள்ள மாவட்டங்களுக்கு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக முன்கூட்டியே அனுப்பப்பட்டுள்ளனர்.

- ❖ இந்திய வானிலை ஆய்வு மையம் நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஆங்காங்கே கனமழை முதல் மிக கனமழை பெய்யக்கூடும் எனவும், மீனவர்கள் யாரும் வங்காள விரிகுடாவின் மத்திய மற்றும் வட பகுதிகளில் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளதை தொடர்ந்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தகவல் உடனடியாக தெரிவிக்கப்பட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

- ❖ தண்ணீர் அதிகமாக வருவதால் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து கண்காணிப்பு பணியில் ஈடுபட துணை ஆட்சியர் நிலையில் குழுக்கள் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

- ❖ நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் அந்தந்த மாவட்டங்களுக்கு சென்று கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்

திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா. காமராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திரு. இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் டி. கார்த்திகேயன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி. பிரகாஷ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., பேரூராட்சிகள் இயக்குநர் திரு.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., நீர்வள ஆதாரத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.எம். பக்தவத்சலம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**